2005 மார்ச் 8]

105—

உணவு மானியம்

* **27343**—**திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூக நலத் துறைமூலம், தமிழ்நாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்களில் தங்கிப் படிக்கும் ஆதரவற்ற பிள்ளைகளின் உணவு மானியத்தை ரூ. 300/- ஆக உயர்த்தித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையிலிருந்து மானியம் பெற்று இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்குத் தற்போது அரசால் வழங்கப்பட்டுவரும் உணவீட்டுச் செலவினமான ரூ.200/-ஐ, ரூ.300/- ஆக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு 1992-ல் அரசு நிர்ணயித்த தொகை அது. இப்பொழுது விலைவாசி அதிகமாக ஏறிவிட்ட காரணத்தினாலும், மாணவர்களுக்கு இந்த நிதியானது போதுமானதாக இல்லாததாலும், அவர்களுக்கு அந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். மற்றும் தற்போது தமிழ்நாட்டில் எவ்வளவு மாணவர்கள் இதில் பயனடைகிறார்கள் என்றும், மாணவிகள் எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்றும், தன்னார்வத் தொண்டு பள்ளிகளை உயர்த்த அனுமதி அரசின் பரிசீலனையில் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு உதவியுடன் செயல்படும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் நலத் திட்டத்தில், குழந்தைகளைப் பராமரிப்பதற்காகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு, மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், 80 சதவிகிதம் 1-4-1992 முதல், மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 20 சதவிகிதம்

தொண்டு நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. இம்மானியம், தொடர் செலவினமாக உணவு, உடை போன்றவற்றுக்கு, ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூபாய் 200 வீதம் வழங்கப்படுகிறது. இவ்வில்லங்களை, மாவட்ட அளவில் மாவட்ட அலுவலர்களும், சமூக நல இயக்குநகரத்தில் உள்ள அலுவலர்களும் முறையாகப் பார்வையிட்டு வருகிறார்கள். இவ்வில்லங்களில் பராமரிக்கப்படும் 14,377 குழந்தைகளுக்கு உதவிட, 183 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிடம் மானியம் பெறுகின்றன. மேலும், இத்திட்டத்திற்காக 2004-2005 ஆம் ஆண்டுக்கு 267.69 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனையும், இம்மானியத்தை ரூபாய் 300 ஆக உயர்த்தக் கோரி, பல்வேறு தொண்டு நிறுவனங்கள் ஏற்கெனவே வேண்டுகோளாக வைத்திருக்கின்றன. அதை அரசு பரிசீலனை செய்து, நிதி நெருக்கடியின் காரணமாக அக்கோரிக்கை ஏற்கப்படவில்லை. எனவே, தொண்டு நிறுவனங்களில் தங்கிப் படிக்கும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு மானியத்தை உயர்த்தித் தரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகம்.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்த்தித் தருவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்று துறை அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனாலும், முதல்வர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, கண்டிப்பாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், ஏழை மாணவர்கள். ஒவ்வொரு விடுதியிலும் S.C. hostel. B.C. hostel போன்ற மற்ற hostel-களில் 50 மாணவர்கள் படிக்கிறார்கள். அவற்றுக்குண்டான செலவு ஒரு மாணவருக்கு வார்டன் செலவு, சமையலர் செலவு, சாப்பாட்டுச் செலவு போன்றவற்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் அரசுக்கு ஆகிறது. ஒரு பிள்ளைக்கு நேரடியாக 500 ரூபாய் கொடுத்தால்கூட போதும். 50 ஆயிரம் ரூபாய் ஆகியும் பல hostel களில் அதற்குண்டான கணக்கு, பொய்யான கணக்குதான் கொடுக்கப்படுகிறது. எனது பகுதியிலுள்ள S.C. hostel-ல் .... *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சி. சண்முகம்: நான் பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்து போட்டு, சரியாக நடக்கிறதா என்று ஆய்வு செய்ய சென்றபோது, அந்தப் புத்தகத்தைக்கூட வழங்கமாட்டேன் என்கிறார்கள். பார்வையாளர் புத்தகத்தை எங்களுக்குக் காட்டமாட்டேன் என்கிறார்கள். அந்தமாதிரி உத்தரவு இல்லை; எந்த எம்.எல்.ஏ.-வும் இதுவரை பார்த்தது இல்லை

2005 மார்ச் 8]

hostel-ல் என்கிறார்கள். இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும், பரிசீலனை செய்து முதல்வர் அம்மா அவர்கள் மாணவர்களுக்கு உயர்த்தி வழங்க ஆவன செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு மானியமாக 80 சதவிகிதமும், தொண்டு நிறுவனம் 20 சதவிகிதமும் கொடுக்கின்றது என்பதனை நான் இங்கே எடுத்துக் கூறியிருந்தேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துவதனால், இதை அரசு பரிசீலித்து சிந்திக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

106—

முதியோர் இல்லம்

*** 41272—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி நகரத்தில் முதியோர் இல்லம் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகரத்தில் முதியோர் இல்லம் தொடங்குவது குறித்த திட்டம், தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. தகுதிவாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், விதிமுறைகளுக்குட்பட்டு அரசு மானியம் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-25

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனம் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனியார் தொண்டு நிறுவனங்களில்கூட சில இடங்களில் கோளாறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கேட்காமலேயே கொடுக்கும் மாண்புமிகு தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மாவின் ஆட்சியிலே, அரசே தொடங்க வேண்டுமென்று கேட்டு, அதை